சுருக்கம்

செய்தி மக்கள் தொடர்புத் துறை – விழாக்கள் – மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் 09.02.2021 அன்று அறிவித்த அறிவிப்பு –திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் பிறந்த நாளான ஆகஸ்டு 25 ஆம் நாள் அன்று வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், காங்கேயநல்லூரில் அரசு விழாவாக கொண்டாடிட தொடர் செலவினமாக ஆண்டுதோறும் ரூ.25,000/-க்கு (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (பொருட்காட்சி மற்றும் விழா)த் துறை

அரசு ஆணை (நிலை) எண்.55 நாள்: 15.06.2021

திருவள்ளுவராண்டு 2052

பிலவ, ஆனி 1-ஆம் நாள்

படிக்கப்பட்டது:-

1. மாண்புமிகு முன்னாள்முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு, நாள் 09.02.2021.
2. செய்தி வெளியீடு எண்.105, நாள்.10.02.2021
3. அரசு ஆணை (நிலை) எண்.39, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (பொருட்காட்சி (ம) விழா)த் துறை, நாள். 26.02.2021.

----

ஆணை:-

மேலே பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ள அறிவிப்பினை செயற்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் பிறந்த நாளான ஆகஸ்ட் 25 ஆம் நாள் அன்று வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், காங்கேயநல்லூரில் நிறுவப்பட்டுள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் அரசு விழாவாக கொண்டாடலாம் என மேலே பார்வை மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது. அவ்விழாவிற்கு ஆண்டுதோறும் செய்தித் துறையால் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான தொடர் செலவினம் ரூ.25,000/-க்கு (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வேண்டி இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை அரசைக் கோரியுள்ளார்.

(த.பி.பா.,)

2. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கருத்துருவினை ஏற்று, மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் திருமுருக கிருபானந்த வாரியார் பிறந்த நாளான ஆகஸ்ட் 25 -ஆம் நாள் அன்று வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், காங்கேயநல்லூரில் நிறுவப்பட்டுள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்துவதற்கான செலவினம் ரூ.25,000/-க்கு (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், மேலும், அச்செலவினத்தை ஆண்டுதோறும் தொடர் செலவினமாக மேற்கொள்ளவும் அரசு அனுமதி அளித்து ஆணையிடுகிறது.

3. மேலே, பத்தி 2-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2220. செய்தி மற்றும் விளம்பரம் - 60 ஏனையவை – 106 கள விளம்பரம் - மாநிலச் செலவினங்கள் – AI. வெளியிடுதல் – 308 விளம்பரமும் பிரச்சாரமும் -09 ஏனையவை(த.தொ.கு.2220-60-106-AI 30809)
IFHRMS (த.தொ.கு.2220-60-106-AI-0893)Old

4. மேலே பத்தி 2-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9-க்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

5. இவ்வாணை வெளியிட நிதித் துறை தனது அலுவல் சார்பற்ற எண்.23563/நிதி (த.வ.(ம)செ.)த்துறை, நாள்.11.06.2021-ன்படி, இசைவளித்துள்ளது.

//ஆளுநரின் ஆணைப்படி//

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்

பெறுநர்:-
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.
மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர் மாவட்டம்.
இணை இயக்குநர் (நினைவகங்கள்), தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை-9.
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், வேலூர் மாவட்டம்.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை-9.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-9/18.

நகல்:-

நிதி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி/வ.செ.பொ/II.வ.வ.-I)த் துறை, சென்னை-9.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (கணக்கு/வரவு- செலவு)த்துறை,

சென்னை-9.

இருப்புக் கோப்பு/உதிரி படிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.